அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.223/2015

தேதி.13.9.201

# மத்திய பிரதேச மாநிலத்தில் வெடி விபத்து ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

மத்திய பிரதேச மாநிலம் ஜபுவா மாவட்டத்திற்குட்பட்ட பெட்லவாட் நகர் பஸ் நிலையம் அருகே ஏற்பட்ட வெடிவிபத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்ததும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்து இருப்பதும் மிகுந்த வேதனையளிப்பதாக உள்ளது.

முதலில் அங்கிருந்த ஓட்டலில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் ஏற்பட்ட விபத்து என்று செய்திகள் வந்தன. ஆனால் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஜெலட்டின் குச்சிகள் போன்ற வெடிபொருட்கள் இருந்த கட்டிடத்தில் ஏற்பட்ட விபத்துதான் இந்த பேரழிவின் துவக்கம் என்ற செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் நடமாட்டம் மிக்க , நெருக்கமாக அமைந்திருக்கும், வணிகக் கடைகள் மிகுந்த ஒரு பகுதியில் வெடிபொருட்களின் விற்பனைக்கு உரிமம் தந்த அதுவும், பல ஆண்டுகளாக நடைபெற அனுமதித்த அரசு நிர்வாகத்தின் மெத்தனப்போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கது.

பல ஆண்டுகளுக்குமுன் மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவால் ஏற்பட்ட உயிரிழப்புகள் என்ற சோக நிகழ்வுகளை மீண்டும் நினைவூட்டுவதாக இந்த சம்பவம் நடந்துள்ளது என்பதே வேதனைக்குரிய விஷயம்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு, படுகாயமடைந்தவர்களுக்கு நிவாரணம் என்ற சம்பிரதாயமான நடைமுறைகள் மட்டுமல்லாது, அரசு இது போன்ற சம்பவங்கள் இனி என்றும் நிகழாது இருக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

அரசு நிர்வாகத்தின் கவனக்குறைவான செயல், ஆபத்தில் முடிந்திருப்பதை உணரவேண்டும். விபத்துக்குக் காரணமான அதிகாரிகள் மீதும், வெடிபொருட்களை விற்பனை செய்ததோடு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பின்பற்றாத வெடிபொருட்கள் வியாபாரிமீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், படுகாயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய எனது பிரார்த்தனையையும் சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்,

நன்றி, வணக்கம்,

உழைப்பவரே உயர்ந்தவர்,

என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,

தலைவர்.